**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S.No.137/2022**

**வா.சா.1 - மீனாகுமாரி 06.02.2025**

**குறுக்கு விசாரணை :-**

நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை பிரதிவாதியிடமிருந்து மீட்டு தரக்கேட்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே இளையான்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.50/2018 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 50/2018 வழக்கில் இந்த பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சுவாதீனத்திலிருந்து வரும் தாவா சொத்தை சட்டப்படி மீட்டுக் கொள்ளவேண்டும் என தீர்ப்பானது. அந்த வழக்கில் 2004ஆம் ஆண்டு முதல் தீர்ப்பு பகரப்பட்ட 2021ஆம் ஆண்டு வரை தாவா சொத்துக்கள் இந்த பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததாக விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது என்றால் சரியல்ல தாவா சொத்துக்கள் அவரது அனுபவத்தில் இல்லை அனுமதியின் பேரில் அனுபவத்தில் இருந்ததாக தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை பக்கம் 8 பாரா 9ல் தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாசொத்துக்களின் பட்டா எனது தந்தை உடையதேவர் பெயரில் உள்ளது. எனது தந்தை 1990ல் இறந்து போனார். எனது தந்தைக்கு மூன்று பெண்பிள்ளைகள் 2 ஆண்பிள்ளைகள் வாரிசுகள் ஆவோம். எனது தகப்பனார் 1990ல் காலமான பின்பு தாவா சொத்துக்களுக்கு பட்டா மாற்ற என்னாலோ இதர வாரிசுகளாலோ வருவாய்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்படவில்லை. 3வது வாதி ரஞ்சனி தாவா சொத்து அமைந்துள்ள சாலியந்திடல் கிராமத்தில் வசித்து வருகிறார். 3ஆம் வாதிக்கு 69 வயது ஆகிறது. 3ஆம் வாதிக்கு 20 வயதில் திருமணம் ஆனது. 3ஆம் வாதி சாலியந்திடல் கிராமத்தில் உள்ள மகாலிங்கம் என்பவரை திருமணம் செய்து அதே ஊரில் வசித்து வருகிறார். மகாலிங்கம் விவசாய வேலை தான் செய்து வருகிறார். 1990ல் எனது தகப்பனார் இறந்த பின்பு சுமார் 7 ஆண்டுகள் தாவா சொத்துகள் விவசாயம் செய்யப்படாமல் தரிசாக எனது

அம்மா கையில் இருந்தது அதன்பிறகு பிரதிவாதி பிழைப்பிற்கு வாய்ப்பில்லை என்று எனது அம்மாவை சந்தித்து கேட்டதால் எனது அம்மா எப்போது கேட்டாலும் சொத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பிரதிவாதியை தாவா சொத்துகளில் விவசாயம் செய்ய அனுமதித்தார். இளையான்குடி நீதிமன்றத்தில் அசல் வழக்கு 50/2018 வழக்கை இந்த பிரதிவாதி வாதியாக இருந்து தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை தாவா சொத்துக்களை பிரதிவாதியிடமிருந்து மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம் நிலஅபகரிப்பு பிரிவில் பிரதிவாதி மீது புகார் கொடுத்தோம். நிலஅபகரிப்பு பிரிவில் கொடுத்த புகார் மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை காவல்துறையின் உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தில் இந்த பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல எதிர்மனுதாரர் கந்தசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 15 இலக்க சொத்துக்களை இந்த பிரதிவாதி விவசாயம் செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15 இலக்க சொத்துக்களை பிரதிவாதி கந்தசாமி விவசாயம் செய்து வந்தார். 7 இலக்க சொத்துக்களுக்கு தான் அசல் வழக்கு 50/2018 இந்த பிரதிவாதி கந்தசாமி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மீதி 8 இலக்க சொத்துக்கள் எனது அப்பாவின் உறவினர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள் அந்த 8 இலக்க சொத்துகள் வேறு கிராமத்தில் உள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொத்து விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தின் அடிப்படையில் இந்த பிரதிவாதி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இளையான்குடி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது உடன்பிறந்த சகோதரரின் பெயர் சுபாஸ்சந்திரன் மற்றும் சந்திரசேகர் ஆகும். அசல் வழக்கு 50/2018 தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் மேற்படி எனது சகோதரர்கள் இறந்து போய்விட்டார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு 50/2018 வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாக இருந்த அருள்மரியபாக்கியம் அந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அசல் வழக்கு 50/2018 வழக்கையும் இந்த வழக்கையும் நடத்துவதற்கு இறந்து போன எனது சகோதரர்களின் வாரிசுகளுக்கு சம்மதம் இல்லை என்றால் சரியல்ல. எனது

தந்தையின் வாரிசுசான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை இறந்த பின்பு தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை எனது சகோதரர் சந்திரசேகர் தான் வரிசெலுத்தி வந்தார். எனது சகோதரர் சந்திரசேகர் வரிசெலுத்திய வரிரசீது தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்துக்களுக்கு பெயரளவில் தான் எனது தந்தை பெயரில் பட்டா இருந்தது என்றும் தாவா சொத்துக்களை நாங்களோ எங்கள் தாயாரோ தாவா சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை சம்பந்தமாக 07.07.2018 அன்று பிரதிவாதி எனக்கும் எனது சகோதரர் மனைவிக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு 14.07.2018 அன்று எங்கள் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் 07.07.2018 அன்றே தாவா சொத்துகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை மேற்கொண்ட பின்பு பிரதிவாதியை காவல்துறை மூலம் மிரட்டி பணியவைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 06.08.2018 அன்று வா.சா.ஆ.8 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் 06.08.2018 அன்று புகார் மனு கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார்மனு எனது சகோதரர்களின் வாரிசுகளால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல அவர்களின் சார்பாகவும் நான் புகார் கொடுத்தேன். அசல் வழக்கு எண்.50/2018 வழக்கில் எனது சகோதரர்களின் வாரிசுகளால் அபிடவிட்டுகளோ மனுக்களோ கையொப்பம் செய்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் அவர்கள் சார்பாக நான் தாக்கல் செய்துள்ளேன். நான் 14.07.2018 தேதியிட்டு பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் தாவா சொத்துக்ள் பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து 6 வருடங்களுக்கு மேலாக பயிர்காப்பீடு அவரது பெயரில் பெற்று அனுபவம் செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது போல தாவா சொத்துக்களை மேடுபள்ளம் சரிசெய்து மணல் விற்று எங்களிடம் பணம் கொடுக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மணல் அள்ளுவதற்கு எங்களிடம் அவர் அனுமதி பெறவில்லை பணமும் எங்களிடம் கொடுக்கவில்லை. சர்வே எண்.316/6 என்ற சொத்தை எனது சகோதரர் சந்திரசேகருக்கு எனது

சம்மதத்தோடு 01.03.2007 அன்று ரூ.26,250/-க்கு வெண்ணிலையாக கிரையம் கொடுத்து அதுமுதல் பிரதிவாதி அனுபவம் செய்து வந்ததாகவும் மற்ற தாவா சொத்துக்களை பொறுத்து ரூ.60,000/- ஒத்தி தொகை செலுத்தி வைத்திருந்ததாகவும் மேலும் தாவா சொத்துகள் உள்ளிட்ட மொத்த சொத்துக்களையும் மேடு பள்ளங்கள் சமன்செய்து சீர்ப்படுத்த ரூ.2,00,000/- பிரதிவாதி செலவழித்ததாகவும் மேற்கண்ட தொகை முழுவதையும் செலுத்தி வைத்துவிட்டு தாவா சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொள்ளுமாறு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பினாரா என்றால அறிவிப்பு அனுப்பினார். சர்வேஎண்.316/6யை பொறுத்து விடுதலை எழுதிகொடுக்குமாறு அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அந்த அறிவிப்பில் உள்ள விபரங்களை நாங்கள் மறுத்துள்ளோம். மேற்படி விபரங்களை இந்த வழக்கில் பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை எனறால் சரிதான். அதனால் உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் வழக்குரையில் எனது தாயாரிடம் மட்டும் தான் பிரதிவாதி தாவா சொத்துக்ளை மேற்பார்த்து விவசாயம் செய்து வர அனுமதி கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது எங்களிடம் அனுமதி கேட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகளின் சர்வே எண் மற்றும் நான்குமால்கள் தெரியும். தாவா சொத்துக்களின் நான்குமால் எனக்கு மனப்பாடமாக தெரியாது அதனால் தற்போது என்னால் சொல்ல இயலவில்லை. தாவா சொத்துக்களை எனது தகப்பனாரின் ஆயுளுக்கு நாங்கள் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் கல்லறை தாவா சொத்துக்களில் ஒரு சொத்தில் உள்ளது. எனது தகப்பனாரின் கல்லறை உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த கல்லறை உள்ள சொத்தின் நான்குமால் என்னால் மனப்பாடமாக சொல்ல இயலவில்லை. தாவா சொத்து உள்ள சாலியந்திடல் கிராமத்தில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது தற்போது இடிந்த நிலையில் உள்ளது அந்த வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியாது. எனது சகோதரி 3ஆம் வாதி ரஞ்சனிக்கு 2 பிள்ளைகள். தாவா சொத்துக்களை பொறுத்த வரை 3வது வாதி ரஞ்சனியின் பிள்ளைகளுக்கு எவ்விதமான உரிமையும் கிடையாது. 4 முதல் 9 வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் உரிமையுள்ளது. தாவா சொத்துக்களை தாங்கள் அனுபவித்தி கொள்வதாக 3ம் வாதி ரஞ்சனியும் அவரது

கணவரும் எங்களிடம் தாவா சொத்துகளை பிரதிவாதியிடம் ஒப்படைப்பதற்கு முன்பே கேட்டார்கள். ரஞ்சனியின் கணவர் வெளியுருக்கு வேலைக்கு சென்று விட்டதால் தாவா சொத்தை அப்படியோ போட்டுவிட்டோம் யாருக்கும் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்களை பிரதிவாதியிடம் ஒத்திக்கு வைத்தும் சர்வே எண்.316/6யை எனது சகோதரர் சந்திரசேகர் பிரதிவாதிக்கு வெண்ணிலையாக கிரையம் கொடுத்ததன் அடிப்படையிலும் தாவா சொத்துகளுக்காக பிரதிவாதி ரூ.2,00,000/-க்கு மேல் செலவு செய்திருந்த நிலையிலும் பெண்களாகிய 1 முதல் 3 வாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லாததால் தாவா சொத்துக்களை 3ஆம் வாதி வசம் ஒப்படைக்காமல் பிரதிவாதி வசம் எனது அம்மா ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. 3ஆம் வாதி வசம் ஒப்படைத்தால் 1, 2 வாதிகளாகிய நாங்களும் தாவா சொத்தில் பாக உரிமை கோருவோம் என்பததால் தான் எனது அம்மாவும் எனது சகோதரர்களும் 3ம் வாதிக்கு தாவா சொத்துக்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரும் எனது தாயாரும் கிரையம் கொடுக்கும் காலத்தில் அன்றைய நிலவரப்படி கிரையத் தொகை பெற்றுக்கொண்டு கிரையம் கொடுப்பதாக உறுதிமொழி அளித்தார்கள் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்துக்களுக்கு பயிர்காப்பீடு 3ம் வாதி பெயரில் உள்ளது அந்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. கடந்த ஆண்டு மட்டும் தான் 3ம் வாதி பெயரில் பயிர்காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் கடந்த வருடமும் இந்த வருடமும் 3ம் வாதி பெயரில் பயிர்காப்பீடு செய்யபட்டுள்ளது. சர்வே எண்.319/6 சொத்தை பொறுத்து பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு 19/2023 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துகளை பொறுத்து 4 முதல் 9 வாதிகளுக்கு மட்டும் தான் உரிமையுள்ளது என்றும் 1 முதல் 3 வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தாயார் மற்றும் சகோதரர்கள் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு பாகப்பிரிவினை ஏற்படவில்லை. 1 முதல் 3 வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்பதால் தான் பாகப்பிரிவினை செய்து கொள்ளப்படவில்லை என்றால சரியல்ல. 1 முதல் 3 வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் உரிமை இல்லை என்பதால் தான் எனது சகோதரர் சந்திரசேகர் தாவா சொத்துகளை ஒத்திவைத்தும் வேறு ஒரு சொத்தை வாய்மொழியாக

பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால சரியல்ல. 4 மதல் 9 வாதிகள் தாவா சொத்துக்களை சீர்செய்த தொகை ஒத்திதொகை வேறொரு சொத்திற்கான கிரையதொகை ஆகியவற்றை பிரதிவாதிக்கு செலுத்திடாதபட்சத்தில் தாவா சொத்துக்களில் சுவாதீனத்தை பெற உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 வாதிகளுக்கு தாவா சொத்துககளை சுவாதீனம் பெற உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நீணடகாலமாக பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாங்கள் நீண்டகாலமாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

**மானாமதுரை.**